# சர்வாதிகாரத்திற்கு விழுந்த சம்மட்டிஅடி!

திராவிட இயக்கத்தின் முக்கிய கொள்கையே மத சார்பின்மை, சமூக நீதி, ஜனநாயகம் திளைக்கச் செய்வது ஆகும். ஆனால் உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி 2014ல் அமைந்த காலத்திலிருந்து சர்வாதிகாரம் கோரத் தாண்டவம் ஆடுகிற நாடாக மாறத் தொடங்கியது.

2019 தேர்தலில் 303 இடங்களைக் கைப்பற்றியதால் கர்வம் தலைக்கேறி ஒன்றிய பா.ஜ.க.அரசு தனக்கு பிடிக்காதவர்கள் மற்றும் விரும்பாதவர்கள் குறிப்பாக சிறுபான்மை சமூகத்தினர் மீது கக்கிய விஷம் கொஞ்சம் நஞ்சமல்ல. ஏவி விட்ட அடக்குமுறைகளோ அநியாயமோ அநியாயம்.

உதாரணத்திற்கு ஒரு பில்கிஸ் பானு குடும்பம் பட்டபாடு போதும். அவளது ஒரு வயது குழந்தை சுவற்றில் இரண்டு கால்களையும் பிடித்து அடித்துக் கொல்லப்பட்ட விதம் நல்மனம் கொண்டவர்களின் இதயம் இரத்தத்தைக் கக்கிடத்தான் செய்யும். கர்ப்பிணியாக இருந்த பில்கிஸ்பானு கதற கதற கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதும், அவரது குடும்ப உறுப்பினர்கள் கொல்லப்பட்ட விதமும் கொடுமையிலும் கொடுமை.

கில்லட்டின் கொலைக்காக உலகையே அதிர வைத்த லூயி மன்னன் காலத்திலும், அறுபது லட்சம் யூதர்களை மட்டுமின்றி இலட்சக்கணக்கான மக்களை கொன்றும் மகிழ்ந்த ஹிட்லர் காலத்திலும், கோர கொலைகளுக்கும் கொடூர அடக்குமுறைகளுக்கும் காரணம் ஆனதால் முச்சந்தியில் வைத்து அடித்து இழுத்து வரப்பட்டு தன் நாட்டு மக்களாலேயே கொல்லப்பட்ட முசோலினி காலத்திலும் கூட இப்படி பச்சிளம் குழந்தைகள் படுபாவித்தனமாக சுவற்றில் அடித்துக் கொல்லப்பட்டதில்லை. கொலையாளிகள் முன்கூட்டியே விடு விக்கப்பட்டு பா.ஜ.க.வினர் அவர்களுக்கு தந்த வரவேற்பும், மாலை அணிவிப்பும் மன்னிக்க முடியாதது.


**வி.பி.கலைராஜன்**

கழக இலக்கிய அணிச் செயலாளர்




ஆனால் அகிம்சைக்காக உலகப் புகழ் பெற்ற மகாத்மா காந்தி பிறந்த நாட்டில் இப்படிப்பட்ட சர்வாதிகார செயல் நடந்து ஜனநாயகம் ஒழிக்கப்பட்டது ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி காலத்தில் தான் நடந்தேறியது. மக்கள் சக்தியால் மௌனமாக வேடிக்கை பார்க்க தான் முடிந்தது. அதையும் மீறி பேசினால் இ.டி பாயும், சி.பி.ஐ சிறைக்குள் தள்ளும், ஐ.டி ஆலவட்டம் போடும். மகாத்மாவை கொன்ற கோட்சே கூட்டம் இப்படி கொலை வெறி தாண்டவமாடினர். கொலை யாளி கோட்சேவுக்கு பா.ஜ.க.வினர் சிலை வைக்க வேண்டுமென்கின்றனர்.

அதனால் தான் 2024 நடந்த முடிந்த தேர்தலில் 400 எம்.பிக்கள் எதிர்பார்ப்பு 370 எம்.பிக்கள் நிச்சயம் என்ற பிரதமர் மோடி மூச்சு முட்டக் கத்தினார். முதல் இரண்டு கட்டத் தேர்தல் முடிந்தவுடன் அவருக்கு இந்தியா முழுவதும் எதிர்ப்பு நிலைதான் உருவாகியுள்ளது என்று தகவல் வர அடுத்தடுத்த தேர்தல்களில் பிரச்சாரத்திற்கு போனவர் மதம் கொண்ட யானை பிளிருவதைப் போல பித்துப் பிடித்தவராய் பிதற்ற ஆரம்பித்தார்.

70 எம்.பிக்களையாவது பா.ஜ.க. பெறும் மாநிலம் என்ற உத்தரபிரதேசத்தில் பாதியை கூட பெற முடியாமல் பரிதாபத்திற்குரிய நபராக பார்க்கப்பட்டார் பிரதமர் மோடி. உச்சந்தலை வரை உஷ்ணமாகி உளறல் நாயகரானார். ஒரு பிரதமர் எப்படியெல்லாம் பேசக்கூடாதோ அப்படியெல்லாம் பேசினார்.

ராகுல் காந்தி பிரதமராவதை பகை நாடான பாகிஸ்தான் விரும்புகிறது என்று நஞ்சை நாவினால் கக்கினார். 500ஆண்டுகாலவிருப்பம்இப்போதுநிறைவேறியுள்ளது என்று பாலராமருக்கு சிலை வைத்து பெருமை பேசினார். பின்னர் அவரே ராமர் கோயிலை புல்டோசர் மூலம் இடித்துத் தள்ளி விடுவார்கள் என்று புனை சுருட்டைப் பொய்யாக அவிழ்த்து விட்டார்.

அதோடு மட்டுமா இஸ்லாமியர்கள் இந்திய நாட்டு மக்கள் என்பதை மறந்து ஊடுருவல்காரர்கள் என நயவஞ்சகத்தோடு உளறிக் கொட்டினார். இந்து மக்களின் சொத்துக்களைப் பிடுங்கி இஸ்லாமியர்களுக்கு இந்தியா கூட்டணி தரப் போகிறது என்று தேர்தல் ஆணையத்தின் சட்டத்திற்குப் புறம்பாக மதப்பிளவை அரசியலாக்கி வாக்குகளை அறுவடை செய்யலாம் என்று முயற்சித்தார். இஸ்லாமியர்களுக்கு தனி பட்ஜெட் போடப் போகிறார்கள் என்று புளுடா விட்டார்.

காங்கிரஸ் தேர்தல் அறிக்கை முஸ்லிம் லீக் அறிக்கை போல் இருக்கிறது என்று ஏளனம் செய்தார். இல்லை! இல்லை! ஏமாற்று வேலை புரிந்தார். பதட்டத்தில் பாவம் மோடி எருமை மாட்டைக் கூட விட்டு வைக்கவில்லை ஒரு எருமை மாட்டைப் பிடித்து இஸ்லாமியர்களிடம் காங்கிரஸ் கொடுத்து விடும் என்றார்.

பசுவுக்கு தான் பா.ஜ.க. வினர் பாதுகாவலர்கள் என்று நினைத்தால் எருமை மாட்டுக்கும் தாங்களே பாதுகாவலர்கள் என்று பேசி நிரூபித்தார். பசுவின் பெயரில் பா.ஜ.க. ஆட்சியில் கொல்லப்பட்டவர்கள் பெரும்பாலும் இஸ்லாமியர்கள் மற்றும் தலித்கள் தான்.

ஒடிசா மாநில ஜெகந்நாதர் கோயிலின் கருவூல சாவியை தமிழன் திருடி தமிழ்நாட்டுக்கு அனுப்பி விட்டான் என்று தமிழர்களுக்கு திருட்டுப் பட்டம் தந்தார். பாவம்! பிரதமர் மோடி வரலாறு சரியாக படிக்காதவர். இமயம் வரை போர் தொடுத்து சென்று தமிழர்களை இழிவாக பேசிய கனக விஜயர் தலைகளில் கண்ணகிக்கு சிலை எடுக்க கற்களை சுமக்க வைத்து அழைத்து வந்த வீரப் பரம்பரை தமிழர் பரம்பரை என்பதை யாரும் அவருக்கு சொல்லித் தரவில்லை. பா.ஜ.க. தமிழகத்தில் 40 தொகுதிகளிலும் நாக்குத் தள்ளியது தான் மிச்சம். இந்தியா கூட்டணி இமாலய வெற்றியாக 40 தொகுதியிலும் வென்றது. அதற்கு கழகத் தலைவர் தளபதி அவர்களின் உழைப்பே முழுமுதற்காரணம்.

எஸ்.சி, எஸ்.டி, ஓ.பி.சி ஒதுக்கீட்டில் 15 விழுக்காட்டை முஸ்லிம்க ளுக்கு பிடுங்கி தர போகிறது காங்கிரஸ் என்று மணலில் கயிறு திரித்தார். கட்டிய மனைவியைத் தான் மறைத்து கண்ணீரும் கம்பலையுமாக விட்டாரென்றால் ஈன்ற தாய் தந்தையையே தனது பெற்றோர்கள் இல்லையென்று இழிவுபடுத்தும் வண்ணம் நான் பயாலாஜிக்கலாக பிறக்கவில்லை. நான் கடவுளால் படைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட அவதார புருஷர் என்று தன்னைத் தானே அறிவித்துக் கொண்டார்.

இப்படி அவரது உளறல்களை பார்த்து உலகம் சிரித்தது. தன் நாட்டு சொந்த மக்களையே இப்படி வெறுக்கும் மனிதரா இந்திய பிரதமர் மோடி என்று ஏளனத்துடன் பார்த்தனர். ஆனால் இவ்வளவு பேசிய பிரதமர் மோடி ஒரு கட்டத்தில் இஸ்லாமியர்களைப் பற்றி நான் தவறாக ஒன்றும் பேசவில்லை என்று மிகப்பெரிய பொய்யை ஜப்பான் மீது வீசப்பட்ட அணுகுண்டைப்போல்வீசினார். அவர் தான் நம் பிரதமர் மோடி.

வண்ணமயில் அமர்ந்த இடத்தில் வல்லூறா! சிங்கம் அமர்ந்த இருக்கையில் சிறு நரியா! மணக்கும் மல்லிகை இருந்த இடத்தில் எருக்கம் பூவா! பந்தயகுதிரை பாய்ந்த இடத்தில் மண்குதிரையா! ஆம் வன்ம மற்ற வாஜ்பாய் அவர்கள் இருந்து ஆட்சி செய்த இடத்தில் நரேந்திர மோடியா! இது சரியா! நாட்டிற்கு நல்லதா! கங்கையும், காவிரியும் புனித ஆறுகளாய் பாய்ந்திடும் நாட்டில் மதத்தினால் மக்களை மோத விட்டு இரத்த ஆறுகளை பார்க்கத் துடிக்கும் கூட்டத்தை நாம் மீண்டும் ஆள விடலாமா? என்று மக்கள் சிந்திக்கத் தொடங்கினர்.

பா.ஜ.க. எந்த இடங்களையெல்லாம் தங்கள் கோட்டைகள் என்று நம்பினார்களோ அங்கெல்லாம் மக்களின் கோபக் கனல் அம்புகளாய் மாறி அந்த கோட்டைகளில் ஓட்டைகளை போட்டது. ஓட்டை விழுந்த கப்பல் ஊர் வந்து சேருமா? என்ன ஆச்சரியம் கரை வந்து சேர்ந்தது.

272 எம்.பிக்கள் இருந்தால் தனி மெஜாரிட்டியுடன் ஆட்சி செய்யலாம் என்று நிலை இருக்க கருத்துக் கணிப்புகள் என்ற பெயரில் ஒரே எண்களை 340 முதல் 350 வரை பா.ஜ.க. தனித்து வெற்றி பெறும்! ஆட்சி அமைக்கும்! என்று தொடர்ந்து கூறி வந்த போதும் 240ஐ எட்டிப் பிடிக்க மோடி குட்டிக்கரணம் போட வேண்டி வந்தது.

ராஜபுத்திரர்கள், ஜாட், குரும்பர், தலித், சிறுபான்மையினர், தமிழர்கள், யாதவர்கள் என்று பெரும்பான்மை மக்களின் வெறுப்புக்கு ஆளான பிரதமர் மோடி என்ற கப்பல் சந்திரபாபு நாயுடு, நிதிஷ்குமார் என்ற இரண்டு துடுப்புக்களால் கரை சேர்ந்துள்ளது. ஆனாலும் பா.ஜ.க.வினருக்கு இஸ்லாமியர் மீது வன்மம் குறையவில்லை. ஆம் ஒன்றிய கூட்டணி ஆட்சியில் ஒரு அமைச்சர் கூட இஸ்லாமியர் இல்லை. இது சுமார் 21 கோடி இஸ்லாமியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி.

புதிய வாக்காளர்கள் அதாவது இளம் தலைமுறையினர் பா.ஜ.க.விற்கு வாக்களிக்க வில்லை 2 கோடி பேருக்கு வருடத்திற்கு வேலை என்று பொய் சொல்லி ஆட்சிக்கு வந்த மோடி 20 கோடி பேருக்கு வேலை தந்திருக்க வேண்டும். தந்தாரா? எத்தனை பேருக்கு வேலை தந்தார் என்று கேள்வி கேட்டு பா.ஜ.க.வை புறக்கணித்தனர்.

85 கோடி பேர் ரேஷன் பொருளை நம்பி உள்ளனர். 25 கோடி மக்கள் ஒருவேளை சோற்றிற்கும் வழியற்று பட்டினி சாவுக்கு ஆளாகின்றனர். இதுதான் 10 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியின் சாதனை.

வாரணாசியில் ஆரம்பத்தில் வழுக்கி வழுக்கி விழுந்த பிரதமர் மோடி சிரமப்பட்டு தான் வெற்றியை தொட்டார். 50க்கும் மேற்பட்ட இடங்களில் 1000, 2000 வாக்குகளில் தான் பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது.

சரத்பவார் சாதாரணமானவர் அல்ல! திராவிட சாணக்கியர்! காலம் காத்திருக்கிறது! சரியான நேரத்தை பார்த்திருக்கிறது. விரைவில் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தல் வரத்தான் போகிறது. இந்திய மக்கள் மகிழத்தான் போகிறார்கள். உதயசூரியன் விடியலைத் தரத்தான் போகிறது.

---

கள்ளக்குறிச்சி சம்பவத்தில் அன்பு மணி இராமதாஸ் -

# இராமதாஸ் அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பதா?

## கழக சட்டமன்ற உறுப்பினர்கள் உதயசூரியன் - வசந்தம் கார்த்திகேயன் கண்டனம்!

சென்னை, ஜுன் 23-

கள்ளக்குறிச்சி சம்பவத்தில் இராமதாஸ், அன்பு மணி இராமதாஸ் அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பதற்கும் அவதூறான குற்றச்சாட்டுகளை கூறியதற்கும் தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி விவகாரத்தில் பா.ம.க.நிறுவனர் ராமதாஸ் மற்றும் அன்புமணி இராமதாஸ் ஆகியோர் பொய் குற்றச்சாட்டுகளை கூறி இறந்தவர்களின் வீட்டில் அரசியல் ஆதாயம் தேடுவதாக, தி.மு.க. எம்.எல்.ஏக்கள் வசந்தம் கார்த்திகேயன், உதயசூரியன் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.





சென்னை சட்டப்பேரவை வளாகத்தில் தி.மு.க. எம்.எல்.ஏக்கள் வசந்தம் கார்த்திகேயன், உதயசூரியன் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது, கள்ளக்குறிச்சி சம்பவத்தில் பா.ம.க. நிறுவனர் இராமதாஸ் மற்றும் அன்புமணி இராமதாஸ் ஆகியோர் தங்கள் மீது அவதூறான குற்றச்சாட்டுகளை கூறியதற்கு கண்டனம் தெரிவித்தனர். கள்ளக்குறிச்சி விவகாரத்தில் பொய் குற்றச்சாட்டு களை கூறி இறந்தவர்களின் வீட்டில் தந்தையும், மகனும் அரசியல் ஆதாயம் தேடுவதாக குற்றம் சாட்டிய அவர்கள்,

நாடாளுமன்றத் தேர்தல் தோல்வியால் ஏற்பட்ட விரக்தியில் பா.ம.க. நிறுவனர் இராமதாஸ் மற்றும் அன்புமணி இராமதாஸ் ஆகிய இருவரும் கள்ளக்குறிச்சி சம்பவத்தில் தங்கள் மீது அவதூறு குற்றச்சாட்டுக்களை பரப்புவதாக கண்டனம் தெரிவித்தனர். கள்ளக்குறிச்சி விவகாரத்தில் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபித்தால் பொது வாழ்விலிருந்து விலகத்தயார் என்றும், இவ்வாறு நிரூபிக்க தவறினால் ராமதாஸ் மற்றும் அன்புமணி இராமதாஸ் ஆகியோர் அரசியலிலிருந்து விலகுவார்களா என்றும் தி.மு.க. எம்.எல்.ஏ.க் கள் வசந்தம் கார்த்திகேயன், உதயசூரியன் ஆகியோர் கேள்வி எழுப்பினர்.

தங்கள் மீது அவதூறு புகார்களை கூறிய பா.ம.க. நிறுவனர் இராமதாஸ் மற்றும் அன்புமணி இராமதாஸ் மீது நீதிமன்றத்தில் மான நஷ்ட வழக்கு தொடர உள்ளதாகவும் உறுதிப்பட தெரிவித்தனர்.

---

வெ.இன்பா தலைமை! முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# சென்னை வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் நல உதவிகள் - அறுசுவை உணவு!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ - கலாநிதி வீராசாமி எம்.பி - ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. வழங்கல்!

சென்னை, ஜுன். 23

சென்னை வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் விழா இன்று (23.6.2024 ஞாயிற்றுக் கிழமை) மதியம் 12 மணியளவில், பெரம்பூர், 46 வது வட்டம், நியூ மெகசின்புரம், அம்பேத்கர் சிலை அருகில் நடைபெறுகிறது.

மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் வெ. இன்பா தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர் க. ஜெயராமன், இரா.கருணாநிதி, அ.முருகன், வி.முருகன், சி.ஆனந்தி, வி.வேதா, வை. கௌதமன், க.ஜெயராஜ், சி.சேனாபதி, பி.ஆனந்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.ஆனந்தன், டி.கணேசன், ஜே.பாபு, ஜி.எஸ்.முருகன், கே.முனுசாமி, சி.சிவபிரகாசம், சி.சிவக்குமார், கே. யுவராஜ், டி.டி.மணிமாறன், எஸ்.ஜெயக்குமார், எஸ். ராஜன், ஆர்.சீதா, ஆர்.ரகு, டி.கர்ணா, கே.பிரசாத், எம். ஜெயகிருஷ்ணன், இ.மணிகண்டன், ஜி.கணேஷ், எஸ். கார்த்திக், எஸ்.சங்கீதா, ஜி.மோகன், ஒய்.மகிமை ராஜ், கே.இராதாகிருஷ்ணன், எம்.அருண்குமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி விராசாமி, கழக ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. ஆகியோர் நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் இரா. நரேந்திரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், ந.சர்பஜெயதாஸ், ஏ.ஆர்.ஆர். மலைச்சாமி, க.சர்மிளா காந்தி கருணா, டி.கமலக்கண்ணன், டி.தமிழ்ச்செல் வன், ப.மதிவாணன், க.அமுல், க.பாபு, த.ஆறுமுகம், ஆர். எஸ்.மனோகரன், ஜி.மாரிமுத்து, கே.தினகரன், கே.வி. ராஜன், என்.கார்த்திபன், மு.உமாபதி,

இ ர ா . அ ரி த ா ஸ் , கே.இ.செந்தமிழரசு, சி.எஸ். இரவி மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

கதிரவன், இ.மணிகண்டன், ஏ.மகிமைதாஸ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

க.கோவிந்தராஜ் தலைமை ! இரா.செந்தில்குமார் - வ.பெ.சுரேஷ் - எஸ்.குமார் முன்னிலை !

# 51வது வட்ட திமுக சார்பில் கலைஞர் பிறந்தநாள் பொதுக்கூட்டம் - நலஉதவிகள் !

## க.ராஜீவ்காந்தி சிறப்புரை ! ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி - ஐட்ரீம் ஆர்.மூர்த்தி பங்கேற்பு !

சென்னை, ஜீன்23

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 51வது வட்ட திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா முன்னிட்டு மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (23.06.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணயளவில் ஜெ.பி.கோயில் தெரு, சஞ்சீவராயன் கோயில் தெரு சந்திப்பு அருகில் நடைபெறுகிறது.

51வது வட்ட செயலாளர் க.ஆறு(எ) கோவிந்தராஜ் தலைமை வகிக்கிறார்.இராயபுரம் பகுதி செயலாளர்கள் இரா.செந்தில்குமார், வ. பெ.சுரேஷ், தொண்டர்அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.குமார், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ.மோகன், எல்.சீனிவாசன், காட்டன்.ஜி.சதிஷ்குமார், ஆர்.வி.கணேஷ், என்.கிருஷ்ணன், பி.கண்ணன், என்.பாரி, ஐசிஎப்.பழனிவேல், எஸ். சுரேஷ், க.கலைச்செல்வன், வி.குமார், அத்தோ.பி.முனுசாமி, எம்.என்.வெங்கட், கே. லட்சுமணன், க.சேகர், எம். எம்.சந்துரு, வி.வி.தங்கராஜ், இரா.முருகன், க.சுரேஷ், த. ரவி, எம்.இ.சாகுல்அமீது, கே.ஆறுமுகம், கே.சசி, டி.கவியரசு, கே.குபேரன், வி.சரவணன், டி.நந்தகுமார், எஸ். மாரியப்பன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் மாநில மாணவர் அணி தலைவர் க.இராஜீவ் காந்தி சிறப்புரையாற்றுகிறார்.மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்கிறார்கள்.

பி.டி.பாண்டிசெல்வம், ந.மனோகரன், தா.இளைய அருணா எம்.சி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், க.நாகம்மை, மு.கோபி, ந.சண்முகம், வே. சிவகுமார், பி.ராஜேந்திரன், இரா.பாலன், எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கொயரியர் பி.முருகன்,

பாலாலட்சுமணன், ஜெ.கௌரீஷ்வரன், கே.மதன், ப.சோமசுந்தரமூர்த்தி, க.கோவிந்தசாமி, டி.சுரேஷ், டி.தீனதயாளன், தமீமுன்அன்சாரி, ஜெ. காணிக்கைநாதன், எஸ்.கார்த்திக், அ;ராஜன், யு.அனிபா, எஸ்.ஆண்ட்ரோஸ், மற்றம் பலர் பங்கேற்கின்றனர்.

ஜி.உமாபதி, பி.எஸ்.நாராயணன், ஆகியோர் நன்றி நன்றி கூறுகின்றனர்.

---

பிரசிடென்சி சி.சதீஷ் தலைமையில் - க.ஜெயராமன் முன்னிலையில் - வெ.சு. சத்யநாராயணன் வரவேற்புரையில்

# சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் கல்வி உபகரணங்கள்!

## எஸ்.மோகன் - ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகளை வழங்கினர்!

சென்னை, ஜுன் 22

சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் நிறைவு விழாவை முன்னிட்டு பள்ளி பயிலும் 500 மாணவ மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா 21.6.2024 வெள்ளிக்கிழமை மதியம் 4 மணி அளவில் செயின்ட் ஜோசப் மேல் நிலைப்பள்ளியில் நடைபெற்றது.

சென்னை வடக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பிரசிடென்சி சி.சதீஷ் ஏற்பாட்டில் பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க.ஜெயராமன் 36 ‘அ’ வட்டச் செயலாளர் க.பாபு முன்னிலையில் சென்னை வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வெ.சு சத்யநாராயணன் வரவேற்புரை ஆற்றினார் .

இந்நிகழ்வில் மாணவ - மாணவியர்களுக்கு நலத்திட்ட உதவிகளை கழக மாணவரணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கினர்.

பெரம்பூர் வடக்கு பகுதி செயலாளர் அ.முருகன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மாவட்ட பொருளாளர் வி. தயாளன், பொதுக்குழு உறுப்பினர்கள் எ.தமிழ்ச்செல்வன், ப.மதிவாணன்,

பெரம்பூர் தெற்கு பகுதி வட்ட செயலாளர்கள் த.ஆறுமுகம், ஜி.மாரிமுத்து, கேபிள் கே. தினகரன், வி.முருகன், பெரம்பூர் வடக்குப் பகுதி செயலாளர் கே.வி.ராஜன், என்.கார்த்திபன், இரா.அரிதாஸ், சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் மு. ரவிக்குமார், நி.எழில் அரசன், ந.ம.மகேஷ் குமார், எஸ்.சத்திஸ்வரி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர் எம்.ஆர். டி.அப்துல் ரகுமான், கூல் பாயிண்ட் பி.பிரகாஷ், அணிகளின் துணை அமைப்பாளர் D.வளன் ராஜ், நா.நடராஜன், மாவட்ட பிரதிநிதிகள் புல்லட் எஸ்.செபஸ்டின்,

ச.சச்சிதானந்தம், வட்டகழக நிர்வாகிகள் க.அ.மூர்த்தி, கே.எம்.குழந்தைசாமி, என். சரவணன், எம். மதிவாணன், துரை. பாஸ்கர், வி.முரளிதரன், கே.ஜி.சீனிவாசன்,

அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கே.தஸ்தகீர், பி.ஜி.எத்திராஜுலு, சி. கிருஷ்ணமூர்த்தி, த.தட்சிணாமூர்த்தி மற்றும் பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்

பகுதி மாணவரணி துணை அமைப்பாளர் எல்.பொன்னரசன் நன்றியுரை கூறினார்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி நரசிங்கனூர் கிராமம் பாகம் 136க்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் வடக்கு, தெற்கு, கண் டோமெண்ட் நகரம், புனித தோமையார் ஒன்றியம் பொறுப்பாளர்கள் இணைந்து நரசிங்கனூர் 136வது பாக வாக்காளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆலந்தூர் மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் பி.குணாளன், புனித தோமையர் மலை ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி என்கிற விவேகானந்தன், கண்டோன்மென்ட் நகர செயலாளர் டி. பாபு,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், துணைத் தலைவர் புருஷோத்தமன், வட்டகழக செயலாளர்கள் ஜெ.நடராஜன், ஜெ.செல்வேந்திரன் எம்.சி, எஸ்.ஸ்டீபன், விக்கிரவண்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் வேம்பி ரவி, ஊராட்சி தலைவர் பாக்கியநாதன்,மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் தேன்மொழி, கிளை கழக செயலாளர்கள் ஆல்பர்ட்,ரமேஷ்,ஜுவா,காங்கிரஸ் பேரியக்கம் அருளப்பன், விடுதலை சிறுத்தைகள் ஏழுமலை, மற்றும் கிளை கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

க.முருகன் ஏற்பாடு! ஜி.ஏழுமலை தலைமை! ஜே.ஜே.எபினேசர் - எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை!

# 47வது வட்ட இளைஞர் அணி மன்றம் சார்பில் கலைஞர் பிறந்தநாள் நலஉதவிகள்!

## நாகம்மை கருப்பையா சிறப்புரை! ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி பங்கேற்பு!

சென்னை, ஜீன் 22

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 47வது வட்ட திமுக இளைஞர் அணி மன்ற சார்பில் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு பிறந்த நாள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (23.6.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் அம்பேத்கர் நகர் பஸ்டாப் அருகில் கொருக்குப்பேட்டை செ.21ல் நடைபெறுகிறது.

இளைஞர் அணி மன்ற செயலாளர் க.முருகன் நிகழ்சிகான ஏற்பாட்டினை செய்துள்ளார்.வட்ட செயலாளர் ஜி.ஏழுமலை தலைமை வகிக்கிறார்.

சென்னை வடக்கு மாவட்டம் இளைஞர்அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாஸ்.டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிட செல்வி, பி.சீனிவாசன், இ.மணி மேகலை எம்.சி, மு.ரவி, பெ. ராம்குமார், அம்பேத்.எம். தியாகு, ஜெ.கண்ணியம்மாள், ஸ்டீல்.எ. மோகன், எம்.குப்புசாமி, டைகர்.பி.எஸ்.வீரா, ஜி. லட்சுமணன், எம்.வீரதிலகம், எ.அமுலு, நாகம்மை கருப்பையா சிறப்புரை, சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

பகுதி செயலாளர் இரா. லட்சுமணன், மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு. கணேசன், இர.பொன்இளவரசன், இ.ரவிக்குமார், டாக்டர் கலைவாணன், என்.மருதுகணேஷ், ஏ.டி.மணி, எஸ். எம்.பரசுராமன், எம்.விமலா, எஸ்.எஸ்.மணி, ஆர்.ராஜன், எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.எ.எம்.சசிகுமார், மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

எம்.குமரன், ஆர்.கௌதம் ராஜ், ஏ.சலீம், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.